தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. VI.—No. 17.] MADRAS:—SUNDAY APRIL, 24, 287. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுக்சொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பூர்வீகஞானம்.	இந்துசமயசாரவிளக்கம்.
வியவசாயரசாயனம்.	இரசவாதியும் மதவாதியும்.
அத்திகம்.	வர்த்தமானசங்கிரகம்.

முன்னே தேவர்களுக்காக விஷத்தையுண்டதற்குச் சாட்சியாகக்கழுத்திலே பரமசிவன் விஷத்தைத்தரித்தனராம். முன்னே அவ ரிருந்தாலல்லவோ பின்பு அவருடைய கழுத்தில் விஷத்தைக் காணலாம். அவரிருப்பதற்குச் சாட்சியாகக் ககனமார்க்கத்தில் ரிஷபவாகனருடராய்ச் சாயங்காலவேளையில பவனிவரலாகாதா?

ராஜா ஸர். டி. மாதவராவ் K. C. S. I. அவர்களால் கன்வோகேஷனில் வாசிக்கப்பட்ட உபந்நியாசத்தின் பாகம்.

பூர்வீகஞானம்.

நமது பூர்வீகாள் தற்காலமனிதர்களைப்பார்க்கினும் வகைகடந்தஞான முடையவர்களென்றுநினைக்கும் துடுக்கானபிசகையொழித்துவிடுங்கள். அது யதார்த்தமாயிருக்கமாட்டாது. ஒவ்வொருவனுடைய வாழ்க்கையில் ஒவ்வொருவருஷத்திலும் முன்னதோடு சேர்க்கையாகக் கொஞ்சங்கொஞ்சமாய் அதிகஞானமடைகிறான். இவ்விதமாய் வருஷத்துக்குவருஷம் ஞானம் விர்த்தியாகிவருகிறது. அப்பிரகாரமே ஒவ்வொருதலைமுறையும் ஞானத்தை முந்தியதலைமுறையின் ஞானத்தோடுசேர்த்துக்கொண்டேவருகிறது. இப்படி நடப்பதினால், ஒருநூற்றாண்டில் ஞானம் கொஞ்சகொஞ்சமாய் மல்கிப்பெருகுகிறது. ஆதலால், தற்காலத்திற்பார்க்கினும் அநேக நூற்றாண்டுக்கு முன்னமே மனிதர்கள் அதிகஞானமடைந்திருந்தார்களென்று துணிவதுவெட்ட வெளிச்சமான ஆபாசம். பூர்வீகாளுடைய ஞானமும் தற்காலத்தவர்களுடைய ஞானமும் சமநிலையிலிருப்பதாகவைத்துக்கொண்டாலும், ஞானம் சம்பாதிப்பதற்குப் பூர்வீகாளைப்பார்க்கிலும் தற்காலமனிதர்களுக்கு எத்தனையோ அனுகூலமானவகைக ளுண்டாயிருக்கின்றன. ஆராய்ச்சிக்கு நமக்குள்ள விடயங்களும், ஆராய்ச்சிக்கு நமக்குண்டாயிருக்கிற சுலபமான மார்க்கங்களும், ஆராய்ச்சிக்கு நமக்குக் கிடைத்திருக்கிற கருவிகளும், கணிப்பதற்கு மிகவுஞ் சிறந்த மார்க்கங்களும் ஆராய்ச்சியினால் தேறுதலடையாகு மவைகளைப் பிரசுரஞ் செய்வதற்கு நமக்குண்டாகியமுகாந்தரங்களும், பரிசோதித்துத் தர்க்கித்து ஒப்பிட்டுச் சர்ச்சைசெய்து பலவிதத்தில்ருசுப்படுத்தி முடிவுகட்டுவதற்கு நமக்குள்ள முகாந்தரங்களும், தொலைதூரமான தலைமுறையார்களுக்கிருந்தவற்றைப்பார்க்கிலும் அதிகவிசேஷமாயிருக்கின்றன. பூர்வீகாளுடைய பரிசோதனைகள் துண்டு துணிக்கையாகவும் பரும்படியான மேற்பூச்சாகவுமிருந்தன. நாமோ, சமுத்திரத்தின் அடிவரையில் மூழ்கிப்பார்க்கிறோம், பூமியின் கர்ப்பம்வரையில் ஊடுருவிப்பார்க்கிறோம். ஆகாயவெளியிலே நெடுந்தூரத்தில் ஏகாந்த ஸ்தானங்களை எட்டிப்பார்க்கிறோம். அவ்விடங்களிலே புது உலகங்கள் சிருஷ்டி அல்லது பிண்டமாகித்திரண்டு வருவதாகக் காணப்படுகின்றன. இப்போது உலகமுழுவதையும் ஒருமிக்கக்கண்டறியலாம். ரெயில்வேமார்க்கமாய்க் கண்டங்களை நாம கடந்து செல்லக்கூடும். ஸ்டீமர்கள் மூலமாய் மகாசமுத்திரங்களைக் கடக்கக்கூடும். மைக்கிரஸ்கோப்பும் டெல்லஸ்கோப்பும்போன்ற கருவிகளால் நமது திருஷ்டிவலுவு எவ்வளவோ விர்த்தியாயிருக்கிறது. நாம் வெளியை அளக்குஞ் சக்தியானது வெகுநேர்த்தியான நாநாவித கருவிகளால் பெருகியிருக்கிறது. அவ்வாறே நமக்குக் காலத்தை அளவிடுஞ் சக்தியுமுண்டாயிருக்கிறது. அதிசயிக்கத்தக்க தபால் ஏற்பாடும் நமக்கு ஏற்பட்டிருக்கிறது, அதினாலே அநேகமார்க்கமாய்ச் சங்கதிகள் பரவுகின்றன. சமாச்சார தூதனாக நாம் மின்னலையே உபயோகிக்கிறோம். பத்திரிகைகள் புஸ்தகங்கள் முதலியவற்றை அச்சிடுகிற அதிசயமானவித்தை நமக்குக்கிடைத்திருக்கிறது, அதினாலே உலகத்திலுள்ள ஒவ்வொருதேசத்தாரும் தங்கள்தங்கள் எண்ணங்களைச் சுலபமாயும் தீவிரமாயும் பரஸ்பரந்தெரிவித்துக்கொள்ள இடமுண்டாயிருக்கிறது. ஆராய்பவர்கள் அளவிறந்தவர்களிருக்கிறார்கள்; அவர்கள் உண்மையை நாடும் அதிஅவாவினாலும் மிகுந்தசிரத்தையினாலும் அதி ஊக்கத்தினாலும் தூண்டப்பட்ட மகாவிசேஷபுத்திமான்கள். சுருக்கமாய், நாகரீகமடைந்த உலகமுழுமைக்கும் மகத்தான ஒரு ஞானசபையானது விடாது தலைமுறைதலைமுறையாய்க் கூடிவருகிறது; மானிடரால் வெளியிடப்படும் ஞானத்தைச்சேர்ப்பதற்கும் விர்த்திசெய்தற்கும்விடாதுபாடுபடுகிறது. கனவான்களே, அமரிக்கையுடனே சாக்கிரதையாய் ஆலோசித்துப்பாருங்கள்; பார்ப்பீராகில், எனது அபிப்பிராயத்தோடு கலப்பீர்களென்பது நிச்சயம். ஆகையால், பூர்வீகஞானத்தைப்பார்க்கினும், நவீனஞானத்தைச் சிலாக்கியப்படுத்துவதற்குப் பின்னிடையவேண்டாம். நமது மூதாதைகளுடைய சர்வஞ்ஞத்துவத்தில் குருட்டாட்டமாய் நம்பிக்கைவைப்பது கெடுதியானது; ஏனெனில், அதினால் வழுக்கள் நிலைபெற்றுப்போகிறதுமன்றி, கெடுதி பயப்பதற்கும் வழியுண்டாகிறது.

வியவசாயரசாயனம்.

(62-வது பக்கத் தொடர்ச்சி.)

கரிமூலம்—இந்த பூதமானது சுத்தியாகவும் தனியாகவும் சாதாரணமாய் வச்சிரங்களிலிருக்கின்றது. மிகுந்த அழகும் ஆச்சரியகரமுமான இந்தரத்தினமானது பளிங்கனசுத்தகரியேயன்றி வேறல்ல. இதை நெருப்பிலிட்டால் கரியாகிவிடுவதே இதற்கு பிரத்தியக்ஷரூபகாரம். இது நிலக்கரியிலிருப்பதுமன்றி காரீயத்திலும் மற்றும அநேகபூதங்களிலும் பிராணிகளின் சரீரத்திலுமிருக்கிறது. ஒருமரத்தண்டை காற்று விசேஷமாக எட்டாதபடிக்கு நெருப்பிலிட்டு சுடுவோமானால் அதுமுழுமையும் எரிந்து சாம்பலாகாது கரியாகவேயிருக்கும். இது தான் கார்பன் அல்லது கரிமூலமென்று சொல்லப்படுவது. விளக்கில் ஒரு ஓட்டைக்காட்டினால் இதில் கறுப்பான ஒருபதார்த்தமுண்டாகும். இதுவும் அந்தகரிமூலந்தான். இக்கரிமூலத்தை ஜீவமூலத்தில் சுடுவோமானால் கரிமூலத்திரவம் என்னும் வாயுரூபங்கொண்ட ஒருபதார்த்தமுண்டாகிறது. இதற்கு வன்னமும் வாசனையுமில்லை. இதில் தீபம் உடனே அவிந்துபோகும், பிராணிகள் செத்துப்போகும். ஆயினும் இது கந்தமூலாதிகளுக்கு அவசியமாய் வேண்டியது. இதில்லாவிட்டால் பயிர்கள்விளையாது. இந்த திரவத்தைப் பயிர் பூண்டுகள் சூரியன்காங்கையினால் சாதாரணமான காற்றிலிருந்து பிரித்து உட்கொள்ளும்.

சுத்தகந்தகம்—இது மிகவும் பிரயோசனகரமான பூதமாய் அநேக இடங்களில் காணப்படுகிறது. இது வெளிர்பசுமையான எளிதிலுடையத்தக்க கனபதார்த்தம். இதற்கு ரசங்கிடையாது. குளிர்ந்திருக்குங்காலத்தில் வாசனையுங்கிடையாது. ஆயினும் இதைச்சுட்டாலும் தேய்த்தாலும் ஒருகந்தமுண்டாகும். ஜலத்தைப்பார்க்கிலும் கொஞ்சங்கனமானது. இலகுவான காங்கையினாலே உருகிப்போகும். காற்றில்லாத இடத்தில அதிகமாகக் காய்ச்சப்பட்டால் கொதித்து ஆவியாய்விடும். காற்றிருந்தால் தீபற்றி எரிந்துபோகும்.

காடிக்காரமூலம்—மற்ற பூதங்களைப்பார்க்கிலும் மெத்தவினோதமானது. எப்போதும் ஜீவமூலத்தோடு சேர்ந்திருக்கும். இதில் கலந்திருக்கும் ஜீவமூலத்தை எளிதில் நீக்கிவிடலாம். இது வெள்ளரக்கைப்போன்ற எளிதிலுருகாநின்ற பதார்த்தம். இருட்டில் வெளிச்சமுள்ளபுகையால் மூடப்பட்டதாகத்தோன்றும். இது காற்றிலிருக்கிற ஜீவமூலத்தோடு கலந்து சாந்தமாக எரிவதினால் அப்புகையுண்டாகும். இதை கையில் கொண்டால் கையிலிருக்கும் காங்கையினாலேயே உருகி கையைச்சுடும், இது வெள்ளைப்பூண்டைப்போன்ற வாசனையையுடையது. ஜலத்திலாவது சாராயத்திலாவது கரைவதில்லை. மெத்தவிஷமுள்ளது, ஆயினும் இது ஜீவமூலத்தோடு கலந்து காடிக்காரத்திரவமென்கிற ஒரு அருமையான பதார்த்தம் ஆகிறது.

பிராணிகளுடைய எலும்புகள் இந்தத்திரவத்தினாலும் சுண்ணாம்பினாலும ஆகின்றன. நமது எலும்பு தசை நரம்பு முதலியவும் நாம் உண்ணுகிற ஆகாரத்தினால் குழந்தைப்பருவத்திலிருந்து வளருவதால் நம்முடைய ஆகாரத்தில் மேற்படிபதார்த்தம் விசேஷமாகக்கலந்திருக்கவேண்டும். ஆதலால் நாம் உண்ணுகிற பாலிலும் பலவித தானியங்களிலும் கிழங்குகளிலும் மாம்சாதிகளிலும் இந்தத்திருவம் விசேஷமாகக்கலந்திருக்கின்றது. இது இல்லாமற்போனால் கந்தமூலங்கள் முளைக்கவேமாட்டா. நிலமானது பாழடைந்து ஒனறையுமுண்டாக்காது. ஆகையால்தான் நுறுக்கப்பட்ட எலும்புகளும் சுடப்பட்ட எலும்புகளும் மிகவும் பிரயோசனகரமான எருவாகின்றன.

கிளோரயின், பிரோமயின், ஜியோடயின், பிளோரயின், என்னும் இந்தநான்குபூதங்களும் ஒன்றுக்கொன்று மெத்தசம்பந்தப்பட்டனவாகத் தோற்றுகின்றன. இவைகளுள் முதற்சொல்லப்பட்ட கிளோரயின் அல்லது இலவணமூலம், அதிகப்பட்டதாயும் சிறந்ததாயும் இருக்கிறது. இது விசேஷமாக சாதாரணமான உப்பிலிருந்து எடுக்கப்படுகின்றது. இலவணமூலமும் ஸொடியன்என்னும் இலவணகாரமும் சேர்ந்துதான் உப்பு அல்லது இலவணமாகிறது. இந்த இலவணமூலம் மிகுந்த பசுமையான ஆவியாயிருக்கின்றது, அதின்கந்தம் மூச்சை அடைக்கத்தக்கது. இதை கொஞ்சம் முகர்ந்தாலும் இரும்பல் அதிகமாய் உண்டாகும். இது காற்றைப்பார்க்கிலும் அதிகபளுவுள்ளது. (இன்னும் வரும்)

த—ணி.

ஆத்திகம்.

பிரபஞ்சத்திற்கு வேறாயும், மனோவாக்குக்காயங்களுக்கதீதமாயும் உள்ளதாகச் சொன்மாத்திரமாய்ச் சொல்லப்படும் சுவர்க்கத்திலும், நரகத்திலும், அவற்றுள் முறையே வசிக்கும் தேவர்களிலேயும், பசாசங்களிலேயும் நம்பிக்கைவைத்து, அந்நம்பிக்கை காரணமாக இன்னல் பலவற்றையும் நன்மையெனக்கருதி இயற்றிவருவதே ஆத்திகம். இதனைப்பற்றி யெழுதப்பட்ட கிரந்தங்களெல்லாம் ஆத்திகநூல்களெனப்படும். இந்நூல்கள் பற்பலதேசங்களிலுள்ள பற்பல மதப்பிராந்தர்களால் தத்தம் மனம்போனபோக்காய் வரையப்பட்டுள்ளன. இம்மதப்பிராந்தர்கள் ஒவ்வொருவரும் தாம்தாம் எழுதிய நூல்களையே பதிநூல்களெனவும், மற்றையர் எழுதிய நூல்கள் பதிநூல்களல்லவெனவும் கூறுகின்றனர். இதனால் ஆத்திகநூல்களுள் ஒன்றையேனும் பதிநூலெனப் பகர்தற்கிடமில்லை. ஆயினும் ஆத்திகநூல்களைப் பதிநூல்களாகக் கொள்ளுமிடத்து அவைபுகல்வன எவையெனவிசாரிப்பது நமது கடனாம். விசாரிக்குமிடத்து, அவை பொய், களவு, கள், காமம், கொலை முதலிய குற்றங்களைச்செய்ய ஏவும் நூல்களாகவேயிருக்கின்றன. எங்ஙனமெனின் இங்ஙனம் உதாரணவாயிலாய் உதகரிப்பாம்.

ஆத்திகநூல்கள் பொய்பகர ஏவுதல்:—ஆபிரகாம் மன்னர் சபையில் தன் மனைவியைச் சகோதரியென்று பொய் பகர்ந்தனர். கிறீஸ்து தனது பிரேதம் மூன்றுபகலும் மூன்று இரவும் புதைக்கப்பட்டிருக்கும் என்று அபத்தம் கூறினர். விவாகமேடையில் வீற்றிருந்த சுந்தரமூர்த்திநாயனாரைத் தமக்கடிமையெனச் சிவன் கூறியுள்ளார். விபசாரத்தொழிலில் முதற்றரம்பூலத்திற்குரியவரான விட்டுணு தன்னை ஏகபத்தினி விரதாசிரோன்மணியெனப் பகர்ந்துள்ளார். இவை யெல்லாம் ஆத்திகநூல்களுள் பொதிந்தவிஷயங்களே.

ஆத்திகநூலகள் களவுசெய்ய எவுதல்:—கிறீஸ்து குடித்தனக்காரன் கழுதைக் குட்டியைத் திருடிவரச்சொல்லி அதன்மீது ஊர்வலம்வந்தார். ஒண்டவந்தகாகம் உரம்பெற்றதென்பதாக எகிப்பதிற் சரண்புகுந்த இசரவேலர் எகிப்தியர் ஆடையாபரணங்களை மோசஞ்செய்து திருடிக்கொள்ளும்படி ஏகோவாவாவின் ஆணையின்பிரகாரம் மோசே கட்டளையிட இசரவேலர் அவ்வாறே களவுசெய்தனர். விட்டுணு கிருஷ்ணாவதாரத்திலே ஆயச்சேரியிலுள்ள வீடுகள்தோறும் புகுந்து, தயிர் பால், வெண்ணெய் இவைகளைத் திருடியுண்டு உரலில் கட்டப்பட்டு அடியுண்டார். இவையெல்லாம் ஆத்திகநூல்களுள் பொதிந்த விஷயங்களே.

ஆத்திகநூல்கள் கள்ளாதி அருந்தலை ஏவுதல்:—நோவா தன் நிர்வாணம் வெளியாகும்படிக் குடித்து வெறிகொண்டுபுரண்டிருந்தனர். ஏசு கானான் தேசத்திலே கலியாணவாசலிலே கள்ளைப்பெருக்கிக் களிக்கச்செய்தனர். சிவன் தன்னடிமைகள் கேட்கும்வரங்களின் தாரதம்மியங்களை யறியாமல் தாறுமாறாக அவர்களுக்கு வரங்களையீந்து பின்பு தான் வருத்தமுறும்படியான அளவிற்குக் கஞ்சாவாதி குடித்துவந்தார். இவையெல்லாம் ஆத்திகநூல்களுள் பொதிந்தவிஷயங்களே;

ஆத்திகநூல்கள் காமச்செய்கைகளை யேவுதல்:—மரியாள் தன் கணவனாகிய யோசேப்புடன் சுகித்தறியாமுன் ஏசுவென்னும் புதல்வனைப் பெற்றாள். சாலோமோன் தனக்குள்ள எழுநூறு பத்தினிமார்கள் போதாமல் முன்னூறு வேசிமார்களையும் புணர்ந்துவந்தார். விட்டுணு பதினாயிரம் கோபஸ்திரீகளுடன் லீலாபோகமியற்றினதல்லாமல் கண்டகண்ட இடங்களில் கண்டகண்ட ஸ்திரீகளைக் கற்பழித்துவந்தார், சிவன் தாருகாவனத்து ரிஷிபத்தினிமார்களனைவரையுங் கற்பழித்ததல்லாமல கங்கையென்னும் பெண்ணையும் தன சடாமுடியில் ஒளித்துவைத்திருக்கிறார். இவையெல்லாம் ஆத்திகநூலகளுள் பொதிந்த விஷயங்களே.

ஆத்திகநூல்கள் கொலைபுரிய ஏவுதல்:—ஏகோவா ஆபிரகாமைநோக்கி அவரது ஏகபுத்திரராகிய ஈசாக்கைத் தனக்கு நரபலியாககொடு என்று ஆக்கியாபித்தார். கிறீஸ்து இரண்டாயிரம் பன்றிகளைக் காரணமின்றி மடுவிற்றள்ளி மாய்த்தனர். சிவன் சிறுத்தொண்டனை அவன அருமைக்குழந்தையைக் கறிசமைத்துத் தமக்குப் படைக்கச்சொன்னார். விட்டுணு கிருஷ்ணாவதாரத்திலே குருகுலவம்மிசததவர்களிலே கலகத்தையுண்டுபண்ணி பற்பலவாயிரங்களாக மாளும்படி பாரதப்போரை விளைத்து முடித்துவிட்டார். இவையெல்லாம் ஆத்திகநூல்களுள் பொதிந்தவிஷயங்களே.

இத்தகைய குற்றங்களுக்கெல்லாம் இடங்கொடுத்திருப்பது ஆத்திகம். ஆத்திகப்போதத்தைப் பருகி அதன் வயப்பட்டொழுதவோரே ஆத்திகர். ஆத்திகம் இன்னதென்றும் இத்தகையதென்றும் அறிந்த ஒவ்வொருவரும் அபிமானமொழிந்தவர்களாயின் மீண்டும் அவர்கள் ஆத்திகர்களாகவிருப்பது அருமை, அருமை. அருமை.

D.

இந்துசமயசாரவிளக்கம்.

விநாயகர் திரிமூர்த்திகளுக்கு அனுக்கிரகஞ்செய்தது.
(55-வது பக்கத்தொடர்ச்சி.)

விநாயகபுராணம்.—விநாயகர் திரிமூர்த்திகள் செய்த தோத்திரத்துக்கிரங்கி, அவர்கள் கேட்டுக்கொண்டபடி, தன்னிடத்து அவர்கட்கு அளவற்ற பத்திகள்பெருகத்தக்கதான வரத்தைத் தந்து, (7) வேதாகமபுராணகலைகளைக்கொண்டு யாவையுஞ் சிருட்டிசெய்யத்தக்க சத்தியைப் பிரமனுக்கும், யோகத்தினால் வேண்டியவடிவங்களைக்கொண்டுயாவையும் இரட்சிக்கத்தக்க சத்தியை விண்டுவுக்கும், ஏகாட்சர சடாட்சர மந்திரங்களைக் கொண்டு எங்குந் தானாகவிருந்து யாவையுஞ்சங்காரஞ்செய்யத்தக்க சத்தியை உருத்திரருக்குங் கொடுத்தார்.

விளக்கம்—(7) இந்த வரத்தின் பெருமையைப் பின்னால் சிருஷ்டி விகாரப்படுமிடத்து ஆலோசிக்கவேண்டும்.—யாவும் பஸ்மீபடலமாய்விட்டபின்பு சிருஷ்டிக்கு முன்னமே வேதாகமபுராணங்கள் எங்கிருந்து முளைத்தன? விநாயகரோ முந்தி யெழுதிவைத்துவிட்டனர் போலும். நடந்த விருத்தாந்தங்கள் புராணமாகவேண்டுமேயல்லாமல், விருத்தாந்தங்கள் நடவாமுன்னமே புராணங்கள் எவ்வாறுண்டாயின? அவற்றைக்கொண்டு சிருஷ்டிசெய்கிறதென்பதென்னையோ? அவை (குயவனுடைய சிருஷ்டிக்கு மண்ணிருப்பதுபோல) பிரமசிருஷ்டிக்குப் பதார்த்தமா, அல்லது (தண்டுசக்கரங்களைப்போல) கருவிகளா, அல்லது சிருஷ்டிசெய்யும் வகையைக் கற்பிக்கும்நூல்களா?—இரட்சிப்பதற்காக விட்டுணு சமயத்துக்கேற்ற தந்திரங்கள் செய்யப் பலவடிவங்க ளெடுக்கவேண்டியது அவசியமாக்கும். விநாயகர் பிந்தி நடக்கப்போகிற காரியங்களை முன்னறிந்து, வேண்டியவடிவங்களெடுக்கும்படி விட்டுணுவுக்கு அனுக்கிரகஞ் செய்தனரென்றால், அநேக சங்கதிகளிலே பிந்தி நடக்கப்போகிறதை முந்தியறியத் தவறிப்போனவராகவும், முந்திநடந்தவையே மறந்தவராகவும் காணுகிறார். இதுவிஷயத்தை இந்த சர்ச்சையில் ஆங்காங்கு காணலாம்.] சங்காரகிருத்தியந்தவிர, வேறு வடிவமெடுக்க அதிகாரங் கொடுக்கப்பெறாத சங்கரன் தாய்ப்பன்றியை யிழந்தபன்றிக்குட்டிகளுக்குத் தாயைப்போலவே பெண் பன்றிவடிவமெடுத்துவந்து பால் கொடுத்துக் காப்பாற்றின சத்தி பெற்றதெவ்வாறோ? பின்போர்சமயத்தில் தவஞ்செய்து பெற்றாலும் பெற்றிருக்கலாம்! இக்காலத்தும் பரமசிவன் திக்கற்ற ஜீவராசிகளை அவ்வாறு காப்பாற்றிக்கொண்டுதான் வந்தி

ருப்பர். அதைக் கண்டறிந்துசொல்ல அக்காலத்தில்
பத்திமான்க ளிருந்ததுபோல இக்காலத்தி லில்லை:
ஆயினும், இப்போது சில அடியார்கள் சிவவேடம்பூ
ண்டுபத்தியில் பழுத்துவருகிறார்கள், அப்படிப்பட்டவர்
கள் கண்டறிந்து சீக்கிரத்தில் சொல்லுவார்கள்போலு
ம்.—

மேற்படி பன்றிகதை திருவிளையாடற்புராணத்தி
லுள்ளது. 45 - வது விளையாட்டு.—முன்னாளில் ஒரு
விச்சாதரன் புலத்தியமுனிவர் செய்கிற தவத்துக்கு
விக்கினமாக வீணையிசைபாடினான், அதற்காக அவர்
அவனைப் பன்றியாகச் சபித்தார்; அவன் விமோசனங்
கேட்டுக்கொள்ள, பாண்டியன் வேட்டையிலே பலமி
ருகங்களோடு உன்னையுங் கொல்லுவான், பின்பு இச்ச
வடிவைப்பெறுவாயென்றார். அந்தபபடியே அவன்
பன்றியாய்ப்பிறந்து அநேக பன்றிகளுக்குத் தலைவனாய்
ப்பெட்டைப்பன்றியுடனே வாழ்ந்துகொண்டிருந்தான்.
இதுநிற்க;—குருவிருந்த துறையில் ஒரு வேளாளனு
டைய பன்னிரண்டு பிள்ளைகள் வேடருடனே கூடிக்
காட்டில்திரிகையில், ஒரு மரப்புதலின்கீழ் தவஞ்செய்
கிறதேவகுருவைக்கண்டு பரிகாசஞ் செய்து கல்லுமண
லும் வாரி அவர்மேல் வீசினார்கள்; அவர்கோபித்து,
அவர்களைப் பன்றியின்வயிற்றிலே பிறந்து குட்டிகளா
ய்த் தாயையும் தகப்பனையுமிழந்து அலைந்து துன்பப்
படககடவீர்களென்று கடிய சாபமிட்டார். அவர்கள்
மேற்படி பன்றியரசனுக்கும் அரசிக்கும்பிறந்து குட்டி
களாயிருக்கும்நாளில், பாண்டியன் வேட்டைக்குவந்து
சிங்கமுதலிய பல மிருகங்களையுங் கொன்று மேலைத்தி
க்கில் போகும்போது ஒரு பன்றிகண்டு இராசபன்றியி
னிடத்திற்கு விரைந்தோடிப் பாண்டியன் வருகிறதைச்
சவிஸ்தாரமாய்ச் சொல்ல, அத்தலைமையான பன்றி
தன்பரிவாரப்பன்றிகளுடனே யுத்தத்திற்கு புறப்படு
கையில், பேட்டுப்பன்றி பிரிவாற்றாமையைப்பற்றி பல
நியாயங்கள் சொல்லிக் குட்டிகளுடனே தானுங் கூட
ச்சென்றது. பாண்டியனும் அவனுடைய சேனையும்
பற்பல ஆயுதங்களைக்கொண்டு வெகு கஷ்டநிஷ்டூரத்து
டனே பன்றிகளைச் சேதப்படுத்தினது விசேஷமல்ல;
அப்பன்றிகள் ஆயுதமொன்றுமில்லாமலே தங்கள்பற்
களாலும் கொம்புகளாலும் காலாலும் வாலாலும் பா
ண்டியனுடைய நால்வகை சேனையை ஹதஞ்செய்தது
மகாவிசேஷம். கடைசியாய் அவ்வரசப்பன்றி கொல்
லப்பட்டபின்பு, பெண்பன்றியும் கூடியவரையில் யுத்த
ஞ்செய்து மாண்டது. நாயகனும் நாயகியுமாகிய அவ்
விரண்டு பன்றிகளும் சுவர்க்கலோகம் போய்ச்சேர்ந்
தன. அப்பால், தாயற்றபன்றிக்குட்டிகள் வருந்திஅலை
ந்துகொண்டிருப்பதைத் தமதிச்சையாய் விமானமேல்
வந்த மீனாட்சிசுந்தரேசர் கண்டிரங்கி, தாய்ப்பன்றியாக
வந்து பால்கொடுத்து வளர்த்து, அக்குட்டிகளுக்கு
ஞான முதலியவையுண்டாகச்செய்து, முகமாத்திரம்
பன்றிமுகமாகவும் உடம்பெல்லாம் மனிதவடிவாகவுஞ்
செய்து, பின்பு பாண்டியனுடையகனவிலடைந்து அவ
ற்றை மந்திரிகளாகவைத்துக்கொள்ளச்செய்து, கடை
சியில் தமது சிவபுரத்திற்சேர்த்துக்கொண்டார்.

இந்தக்கதையினாலே, விண்ணுலகத்தோரும் மண்ணு
லகத்திற்குவந்து தவஞ்செய்கிறபெருமையையும், அ
ப்படிப்பட்ட மேன்மையான மண்ணுலகத்திலுள்ளவர்
கள் பாவிகளாய்ப்போவதையும், பரமசிவன் பாலகொ
டுத்துக்காப்பாற்றுவது முதலியவற்றை முன்னறிந்து
சொன்னஞானிகள் இன்ன இடத்தில் தவஞ்செய்தால்
அதற்கு இன்னபடி விக்கினமுண்டாகுமென முன்ன
தாய் ஞானதிருஷ்டியினாலறிந்துகொண்டு, தகுதியான
இடத்தில் தவஞ்செய்யவகைபறியாத ஞானசூனியர்க
ளாய்ச் சபித்துவிடுகிறசுலபத்தையும், வாசிப்பவர்கள்
யோசித்துப்பார்க்கவேண்டும். பன்றியாய்ப்பிறந்த வி
ச்சாதரன்பேசினாலும், மற்றப்பன்றிகள்பேசினதும், சி
ங்கமுதலிய பலமானமிருகங்கள்மாண்டும் தப்பித்துக்
கொண்டோடியும்போக, பன்றிகள்மாத்திரம் தேர்களை
முறித்து யானைகளைச்சிதைத்து படைவீரரைக்கொன்ற
தும் அதிசயமே.—உல்லாசமாய் விமானத்தின் மேற்
சென்ற சுந்தரேசர் அவ்வழியாய்ப்போனதினாலல்லவா
அப்பன்றிக் குட்டிகளைக்கண்டு இரங்கிப்பால்கொடுத்
துவளர்த்தார்; போகாவிட்டால் என்னமாய்முடிந்திரு
க்கும்? அன்றியும், அதேகாலத்தில் வேறொருதேச
த்திலே பூனைக்குட்டிகள் அவ்வாறு அவதிப்பட்டுக்
கொண்டிருந்தால் அவற்றைக்காப்பாற்ற வகையில்லை
யே; ஒருவேளை அத்தேசத்துக்கடவுள் காப்பாற்றியிரு
ப்பார்போலும். கடைசியாய் அப்பன்றிக்குட்டிகளைச்
சிவபுரத்தில் சேர்த்துக்கொண்டவர் முதலிலே தானே
சேர்த்துக்கொண்டிருந்தால், தான்பன்றியானது முத
லிய இடைச்சம்பவங்கள் ஒழிந்துபோயிருக்குமே. த
ன்னுடைய அருளையும்வல்லமையையும்ஞானத்தையும்
அக்காலத்திலுள்ளார்க்கு வெளியிடவேண்டிப் பன்றி
யாகி விளையாடினாராக்கும்! இக்காலத்தில் தாயிழந்
தோ வேறுகாரணத்தாலோசலதாரையில் புரண்டுருண்
டெழுந்து விழுந்து கிடந்துபாதைப்பட்டுச்சாகிற பூனை
க்குட்டிகளையும் நாய்க்குட்டிகளையும் காப்பாற்றவரவில்
லையே. இக்காலத்தில அப்படி விளையாடச்சாமர்த்தி
யமில்லாமலோ, வெகுகாலமாய்விளையாடி விளையாடி
அலுத்தோ (பின்வருமாறு) விநாயகருடைய கர்ப்பத்
திற் புகுந்து இளைப்பாறிக்கொண் டிருக்கிறார்போலும்.

(இன்னும்வரும்.) A. M.

இரசவாதியும்மதவாதியும்.

பேராசையுடையோர் இனிவரும் எனக் கருதிய பய
னைவிரும்பி இப்போது உள்ளதையும் இழக்கின்றார்கள்.
பேராசை கிலேசத்தையே விளைக்கும். பேராசையு
டையோருக்கு ஒருபொழுதும் திருப்தி பிறவாது. உள்
ளதுபோதும் என்று அமைந்த மனமே குறைவற்ற
களஞ்சியம். எத்துணைப்பெருஞ்செல்வராயினும், திரு
ப்தியில்லாதவர் ஒருபொழுதும் சுகமடையார். இப்பூ
லோகத்தின்கண்ணே, இரசவாதத்தினாலே பெரும்பொ
ருள் சம்பாதிக்கலாம் என்று பேராசைகொண்ட சில
ரும், மதபோதனாவனுசரணைகளினால், பரலோககதியை
யடையலாம் என்று வீணாசைகொண்ட பலரும், பொய்
வேடம்பூண்ட இரசவாதிகளாலும் மதவாதிகளாலும்
வஞ்சிக்கப்பட்டு, தங்களுடைய பொருளையும் தெருளை
யும் இழந்து, வறுமையுற்று, வருந்துவதை யாவரும்
செவியுற்றும் கண்ணுற்றும் உள்ளார். இரசவாதிகள்
இவ்வுலகை பொன்னுலகாக்குவோம் என்கின்றார்கள்.
மதவாதிகள் இவ்வுலகை பொய்யாக்குவேம் என்கின்
றார்கள். இரசவாதிகள் செய்வேமென்பது கைமா
ற்றத்தால்தான், மதவாதிகள் செய்வேமென்பது கார
ணகாரியவாதத்தால்தான். கைமாற்றத்தால் ஒருபொரு
ள்மற்றொருபொருளாவதும் இல்லை, காரணகாரிய வா
தத்தால் உள்ளபொருள்சூன்னியமாவதும் இல்லை. இவ்
வுண்மைகளையறியாத மாந்தர் பேராசையென்னுஞ் சுர
நோயுற்று, இனிமைபபலவற்றிற்கும் காரணமாயுள்ள
இப்பிரபஞ்சத்தினில் வெறுப்புற்று, அனுபோக சித்தி
யாகாத இரசவாதத்திலும், மனோவாக்குக்காயங்களுக்
கெட்டாத பரலோக போகத்திலும் நம்பிக்கையுற்று,
கைப்பொருளிலும் மெய்ப்பொருளிலும், நம்பிக்கைய
ற்றவர்போல நடித்து, இரசவாதத்திலும் மதவாதத்தி
லும் அதிபாண்டித்தியம் அடைந்தவர்போல் நடிக்கும்
வாதிகளுக்குத் தத்தம் பிதுரார்ச்சிதங்களையும், தத்தம்
கைப்பொருள்களையும் ஈந்து, அந்தத்தில் கைம்மாறொ
ன்றும் பெறுததினால், அகமும்முகமும் மிகவும் மெலிந்
து, இகபோகத்தை யனுபவியாது வகைமோசம் போகி
ன்றமை பரிதாபத்தினும் பரிதாபமாகியவிஷயமே. இஃ
தென்ன அறியாமை! இரசவாதமுகவாத மயக்கத்தினா
லே உள்ளபொருளையும் இழந்து வீண்காலம் போக்கா
மல், தங்கள் தங்களால் இயன்ற தொழில்களைச்செய்து
தங்களதும் பிறரதும் சுகானுபோகவிருத்தியின்பொரு
ட்டு செலவுசெய்து, வாழ்ந்திருக்கக்கடவர்களாக மாந்

தர்கள். இரசவாதிகளையும் மதவாதிகளையும் மாந்தர் நம்புதல் மானுஷீகத்திற்கு ஈனமும், இகபோகத்திற்கு ஊனமும் சம்பவிக்கும் என்பதனையறிவது அறிவுடையோரது அருங்கடனும் பெருந்தொழிலுமாம். D.

வர்த்தமானசங்கிரகம்.

மதிராஸ் நாஷனல் இந்தியன் அசோஷியேஷன் என்னும் சங்கத்தின் மெம்பர்கள் சென்ற சோமவாரம் சாயங்காலம் வருஷாந்தர மகாசபை கூடினார்கள். ஆனரேரி செக்ரிடேரியாகிய ஸ்ரீமான் ராய்பஹதூர் ப். ரங்கநாதமுதலியாரவர்களால் ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. அதின் சங்கிரகமாவது:—வருஷக்கடைசியில் சேர்ந்திருக்கிற மெம்பர்கள் 154. இந்தச்சபையாருடைய ஏற்பாட்டினால் இங்கிலீஷ் தமிழ் தெலுங்கு இந்துஸ்தானி உபாத்திச்சிமார்கள் சிலவீடுகளுக்குச் சென்று வகுப்புகள் ஏற்படுத்தி ஸ்திரீகளுக்கு கல்வி கற்பித்துவருகிறார்கள். மகமதியஸ்திரீகள் இந்துஸ்தானி வாசிப்பது தூர்லபமாயிருப்பதால் அந்த பாஷை உபாத்தியாயர் நிறுத்திவைக்கப்பட்டனர். இதுவரையில் வாசித்த ஸ்திரீகள் பரீட்சைக்குப் போயிருக்கிறார்கள். உபாத்திச்சிமார்கள் பரிட்சையில் தேறி, கல்விப்பயிற்றும் முறைமை கற்று சர்ட்டிபிகேட்டு பெற்றிருக்கிறவர்கள். வித்தியார்த்திகளில் சிலர் இங்கிலீஷ் நன்றாய் வாசிக்கவும் கொஞ்சம் பேசவும் கற்றிருக்கிறார்கள். சிலர் இங்கிலீஷில் திறமையாக வீட்டுக்கணக்கு எழுதி வருகிறார்கள். சாதாரணமான தையல்வேலையிலும் சித்திரத் தையல் வேலையிலும் தேர்ந்தவர்களில் சிலர் லண்டன் பட்டணத்துக் காட்சிசாலைக்கு விநோதமான தையல்வேலை அனுப்பியிருக்கிறார்கள். இச்சங்கத்தார் சில வித்தியார்த்திகளுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் வர்த்தனையும் சில பெண்கள் பாடசாலைகளுக்குக் கிராண்டும் கொடுத்துவருகிறார்கள். விஜயநகரம் மகாராஜா அவர்களுடைய பாலிகா பாடசாலைகள் இந்தச் சங்கத்தாருக்குள் ஓர் சப்கமிட்டியாருடைய விசாரணையிலிருக்கின்றன. இந்தப் பாடசாலைகள் அதிக விர்த்தி யடைந்துவருகின்றன.

இந்த ரிபோர்ட்டு முடிந்தபின்பு, ஸ்ரீமான் சோமசுந்தரசெட்டியாரவர்கள் இந்தியாவிலுள்ள ஸ்திரீகளுக்குக்கல்விப் பயிற்சி அத்தியாவசியகமென்பதைப்பற்றி உபன்னியாசம்வாசித்தனர். அதன் சாராம்சமாவது:—ஸ்திரீகளுக்குக் கல்விப்பயிற்றும் தற்கால ஏற்பாட்டினாலே உண்டாகிய பிரயோஜனங்கள திருப்திகரமாகவே இருந்தபோதிலும், அது புத்தியைவிசாலப்படுத்துவதற்குமாத்திரம் உதவுகிறதேயன்றி குடும்பத்திற்கு ஆதாரவாக அவ்வளவாய் காரியபாகமான உதவி புரியவில்லை. ஆதலால் புத்தியை விசாலப்படுத்தும் பயிற்சிமாத்திரம்போதாது, பாகசாஸ்திரமுதலியவைகளைக் கற்று கிருகக்கிர்த்தியங்களுக்கு அனுகூலமாயிருக்கும்படியான பயிற்சியும் வேண்டும். வீட்டில் சரியான ஏற்பாடுகள் செய்விப்பதிலும், குழந்தைகளை அதிக செலவுண்டாகாதபடி உபாயமான ஔவிழ்தங்கொடுத்து பிணிகளை நீக்கி வளர்க்குந்திறமுள்ளவர்களாகவேண்டும்; நமது ஸ்திரீகளுக்கு அப்படிப்பட்ட திறமையில்லாதபடியினாலே வயித்தியர்களுக்குக் குடும்பங்களில அதிக பணங்கொடுத்து வருகிற வழக்கம் யாவருக்குந் தெரிந்தேயிருக்கிறது. நமது ஸ்திரீகள் புத்திவிசாலமடைவதோடு கூட சற்குணங்களிலும் பயிற்றப்பட்டு கிருகக்கிர்த்திய நிர்வாகத்திலும் குழந்தைகளை வளர்ப்பதிலும்தேர்ச்சியடைந்திருப்பார்களாகில்அவர்களுடைய நிலைமை அதிக சிறப்புடையதாகும். இதனாலே குடும்பத்தில் அதிக செலவு குறைந்து, யோகக்ஷேமாபிவிர்த்திக்கு வழியுண்டாகும். இங்கிலாந்து முதலிய மற்றத் தேசங்களில் இதற்கென்று ஸ்திரீகளுக்கு பிரத்தியேகமானபயிற்சிசெய்யப்படுகிறது; இதனாலே அவர்கள் தங்கள் மக்களை அன்புடனே ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி சில வயசுவரையிலே தங்கள் வீடுகளில் நீதிமுதலிய உபயோகமானவிஷயங்களை அவர்களுக்குக் கற்பித்து வருகிறார்கள். நமது சிறுவர்களின் தாய்கள் நடத்துவது அம்மாதிரியல்ல, சிலர் விவேகமாய் நடத்தினபோதிலும் பெரும்பாலார் மற்ற தேசங்களில் தங்களைப்போன்ற ஸ்திரீகள் நடத்துகிறமாதிரியை சுத்தமாய் அறியாதவர்கள். இது மிகவும் பரிதாபப்படத்தக்கதே. அவர்கள் தங்கள்மக்களை வளர்க்கிறமாதிரியானது அவர்களுக்கு சுகமும் வலுவும் உண்டுபண்ணவேண்டியதற்குப் பதிலாக, அவர்களை பலவீனப்படுத்த உதவியாயிருக்கிறது; தாய்களின் மூடத்தனத்தினாலே சில குழந்தைகள் இறந்தும்போகின்றன. இந்தவிஷயத்தில் கற்பிப்பது அத்தியாவசியகமாதலால், டெக்னிகல்இனிஸ்டிட்டியூஷன் என்னும் சாலை ஏற்படுத்துவதற்காக இப்போது அதிக முயற்சி செய்யப்பட்டு கையொப்பம் சேகரிக்கப் படுகிறபடியால் சிறுமிகளை கிருகக்கிர்த்திய நிர்வாகத்திலும் குழந்தைகளை வளர்ப்பதிலும் திறமை யடையும்படி பயிற்றுவதற்காக ஒரு சாகை யேற்படுத்துவது உசிதமாகும்.—சிறு வயதிலே விவாகஞ்செய்கிறவழக்கத்தைக்குறித்து இப்போதுபோதுமான சர்ச்சைநடந்துகொண்டிருக்கிறபடியால் அதுவிஷயத்தில்விசேஷமொன்றுஞ்சொல்லாமல், சிறுபருவவிவாகவழக்கம் எவ்வளவுசீக்கிரத்தில்ஒழிகிறதோ அவ்வளவும்தேசக்ஷேமத்திற்குஅனுகூலமுண்டாகும். என்றுசொல்லிமுடித்தனர். [இச்சங்கத்தார் மேற் போட்டுக்கொண்டு அதிக பொறுமையுடனே நாலு வருஷகாலமாய் சாந்தமாக நடத்திவருகிற விஷயங்கள் மிகவும் புகழப்படத்தக்கவைகளே. இவற்றிற்கு திரவியசகாயம் மிகுதியாக வேண்டியிருக்குமென்பதையாவரும் அறிந்திருக்கலாம். இந்தியாவிலல்லாமல் வேறொருதேசத்திலானால் இப்படிப்பட்ட பொதுநல முயற்சியானது வெகுசீக்கிரத்தில் கைகூடிவந்தேயிருக்கும். இவ்விடத்திலே கல்வியிற் சிறந்தவர்கள் பெரும்பாலும்உத்தியோகஸ்தர்களாதலால்செல்வப்பெருக்கினராதல் அரிது. வர்த்தகவகுப்பாரில் வாசிக்கிற சில புத்திமான்கள் உத்தியோகத்தில் பிரவேசித்துவிடுகிறார்கள்; மற்றவர்கள் வாசிப்புகுறைவினாலே பழயவழக்கங்களை அனுசரித்து, விக்கிரகங்களுக்குப்பிராணப் பிரதிஷ்டைசெய்வதிலும், உற்சவாதிகள்நடத்துவதிலும்விமானங்கள்செய்வதிலும்பிராமணபோஜனத்திலும் லட்சம் பதினாயிரமாக வாரியிறைத்துவிடுகிறார்கள். உபாயமாகவாசித்துக்கொண்ட சிலர் அதிகபுத்திமான்களோடு சேரத்தகாதவர்களானதுபற்றி, தாங்கள் மூடஜனங்களுக்குள் பிரகாசித்துப் பெருமையடையவேண்டுமெனக்கருதி, வேடம்பூண்டு அவர்களைச் சேர்த்துக் கொண்டு பழையகதைகளை உபதேசித்து லவுக்க காரியங்களை அசட்டைசெய்விப்பதால், மேற்கண்டவைபோன்ற பொது நல காரியங்கள் நமது தேசத்திலே சீக்கிரத்தில் விர்த்தியடையுமென்பது கனவுதான்; ஆயினும் 'நன்மைகடைப்பிடி' என்னும் வாக்கியத்தை நாம் எப்போதும் மறக்கலாகாது. E. D.]

அப்பர்பர்மாவிலே பூமி அதிர்ச்சி அடிக்கடி யுண்டாகிறதாகத் தெரியவருகிறது. இப்போது மாதத்திற்கு இரண்டு மூன்றுமுறை யுண்டானபோதிலும் சேதமொன்றுமில்லையாம்.

ராவல்பிண்டி ஆயுதசாலையைச்சேர்ந்த சாமான் கிடங்கில் சென்ற 14வ தீப்பிடித்து சுமார் இரண்டுலட்சம் ரூபாய் நஷ்டமுண்டானதாகத் தெரியவருகிறது.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ௪
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா ௨

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள
சுவக்கியானிகளை
மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்
மெம்பர்களாகச் சேரும்படி
கேட்டுக்கொள்ளலாகின்றது.

கையொப்பநேயருக்கு.

யாதொரு பத்திரிகை வந்து சேரப்பெறாதவர்கள் உடனேதெரிவிக்கவேண்டும்; காலாதீதமாய்த் தெரிவித்தால் அப்பத்திரிகை பின்புகிடைப்பதரிது.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.